செய்தி நான்கு

## மணவாட்டியின் அழகு

வேத வாசிப்பு: ரோ. 6:19, 22; எபே. 5:25-27; வெளி. 19:7-9; 1 தெச. 5:23; உ.பா. 8:13-14

**I. குணரீதியான பரிசுத்தமாக்குதலின் வழிமுறை, கிறிஸ்துவுக்காக அழகான, பரிசுத்தமான, மற்றும், மகிமையான மணவாட்டியாகும்படி நம் அழகுபடுத்துதலாக நம் ஜீவாதார இரட்சிப்பின் வழிமுறையாகும்—1 தெச. 4:3; 1 பேது. 1:15-16; எபே. 1:4-5; 5:25-27; 1 தெச. 5:23-24; ரோ. 6:19, 22:**

A. எபேசியர் 5:25-27, கிறிஸ்துவை மூன்று நிலைகளில் நமக்கு வழங்குவதில் தேவனுடைய முழுமையான இரட்சிப்பின் முழுமொத்தத்தை வெளிப்படுத்துகிறது:

1. கடந்த காலத்தில், மீட்பராகக் கிறிஸ்து, நம் சட்டரீதியான மீட்புக்காகத் தம்மையே சபைக்காக ஒப்புக்கொடுத்தார்—“கணவர்களே, உங்கள் மனைவிகளிடம் அன்புகூருங்கள், அவ்வாறே கிறிஸ்துவும் சபையிடம் அன்புகூர்ந்து, அவளுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்”—வ. 25.
2. நிகழ்காலத்தில், ஜீவன் தரும் ஆவியாகக் கிறிஸ்து, சபை தம் இணைபாதியாக இருக்குமாறு, அவளைத் தம் மூலக்கூறைக் கொண்டு பூரிதமாக்குவதன் மூலம் அவளைக் குணரீதியில் பரிசுத்தமாக்கிக்கொண்டிருக்கிறார்; இதுவே மணவாட்டியின் அழகுபடுத்துதல், மற்றும் மணவாட்டியின் ஆயத்தமாக்குதலாக ஜீவாதார இரட்சிப்பாகும்—“வார்த்தையிலுள்ள தண்ணீரின் கழுவுதலால் அவளைத் தாம் சுத்திகரித்துப் பரிசுத்தப்படுத்தும்படியும்”—வ. 26.
3. எதிர்காலத்தில், மணவாளனாகக் கிறிஸ்து, தம் திருப்திக்காக சபையைத் தம் இணைபாதியாக தமக்கே வழங்கிக்கொள்வார்—“சபை கறையோ சுருக்கமோ, இப்படிப்பட்ட வேறெதுவோ இல்லாமல், பரிசுத்தமாகவும் மாசற்றும் இருக்கத்தக்கதாய் அவளை மகிமையானவளாகத் தமக்கே வழங்கிக்கொள்ளும்படியும்”—இது மணவாட்டியின் வழங்குதலுக்கான நம் மகிமைப்படுத்தப்படுதலாகும்—வ. 27.
4. கடந்த காலத்தில் கிறிஸ்து தம்மையே சபைக்காக ஒப்புக்கொடுத்தார்; நிகழ்காலத்தில், அவர் சபையை பரிசுத்தமாக்கிக்கொண்டிருக்கிறார்; எதிர்காலத்தில், அவர் தம் திருப்திக்காக சபையைத் தம் இணைபாதியாகத் தமக்கே வழங்கிக்கொள்வார்; ஆகையால், அவர் சபையை அன்புகூருவது அவளைப் பரிசுத்தமாக்குவதற்காக இருக்கிறது, அவர் சபையைப் பரிசுத்தமாக்குவது அவர் சபையை மகிமையானதாகத் தமக்கே வழங்கிக்கொள்வதற்காக இருக்கிறது.

B. மணவாட்டியின் அழகு, சபையின் மூலம் வெளிக்காட்டப்படும்படி சபைக்குள்ளாக அடித்துருவாக்கப்பட்டிருக்கிறவரும் சபையிலிருந்து வெளிப்பிரகாசிக்கிறவருமான கிறிஸ்துவிலிருந்தே வருகிறது—ஏசா. 43:7; எபே. 3:21.

C. கிறிஸ்து தம் மக்களில் மீதியானவர்களுக்கு மகிமையின் கிரீடமும் அழகின் மகுடமுமாக இருக்கிறார்—ஏசா. 28:5:

1. கிரீடம் என்பது, ஒரு தொப்பி அல்லது தலைப்பாகையைப் போன்றது, இப்படியிருக்க மகுடம் என்பது, கிரீடத்தின் மிக அழகான, மகிமையான பகுதியாக பரிவட்டமாகும்—யாத். 28:36-39; 29:6; ஏசா. 62:3.
2. நாம் நம் அழகின் மகுடமாகிய கர்த்தரைக் கொண்டு அவருடைய அழகான மணவாட்டியாகும்படி, கர்த்தரால் அழகுபடுத்தப்பட்டு, மகிமையிலிருந்து மகிமைக்கு மறுசாயலாக்கப்படுமாறு, நாம் அவருடைய அழகின் வீடாகிய சபையில் அவருடைய அழகைத் தொடர்ச்சியாக நோக்கிப்பார்க்க வேண்டும்—2 கொரி. 3:18; வெளி. 19:7-9; ஏசா. 28:5; சங். 27:4; ஏசா. 60: 1, 7, 9, 13, 19; 62:3; வெளி. 21:11.

**II. மீட்டுத்திருப்புதலில் கர்த்தருடைய பிரதானமான வேலை, அவருடைய மகிமையான மணவாட்டியாக இருக்கும்படி நம்மை ஆயத்தமாக்கும்படியான அவருடைய உண்மையான வேலையாகும்; எபேசியர் 5:26இல் பேசப்படும் தொடர்ச்சியான, குணரீதியான பரிசுத்தமாக்குதலைத்தவிர மணவாட்டி**

**ஆயத்தமாக்கப்படுவதற்கு எந்த வழியும் இல்லை; எனவே வெளிப்பாடு 19:7-9, நிறைவேற்றப்படுவதற்கு எந்த வழியும் இல்லை:**

A. கிறிஸ்து ஜீவன் தரும் ஆவியாக, தம் வார்த்தையிலுள்ள தண்ணீரின் கழுவுதலால் நம்மை சுத்திகரிப்பதன் மூலம், சபையானது பரிசுத்தமாகுதல் என்ற வழிமுறையின் மூலம் அழகுபடுத்தப்பட்டுவருகிறது—எபே. 5:26-27:

1. இது, கிறிஸ்துவின் வார்த்தையில் ஜீவத் தண்ணீராக ஆவியானவர் இருக்கிறார் என்று சுட்டிக்காட்டுகிறது; அவர் நம்மிடம் பேசுகிற வார்த்தைகள் ஆவியாகவும் ஜீவனாகவும் இருக்கின்றன—யோவா. 6:63.
2. ஜீவன் தரும் ஆவியாக, கிறிஸ்து பேசுகிற ஆவியானவராயிருக்கிறார்; அவர் பேசுகிறதெல்லாம் நம்மைக் கழுவுகிற வார்த்தையாகும்; இது, நிலையான வார்த்தையாகிய லோகோஸைக் குறிக்கவில்லை, மாறாக கர்த்தர் தற்போது நம்மிடம் பேசுகிற வார்த்தையாகிய, உடனடி வார்த்தையைக் குறிக்கிற ரேமாவைக் குறிக்கிறது—மத். 4:4; யோவா. 6:63; வெளி. 2:7; 22:17; ஒப். ஏசா. 6:9-10; மத். 13:14-15; அப். 28:25-31.
3. கிறிஸ்துவின் பேசுதல் ஆவியானவரே; அவருடைய பேசுதல் ஜீவன் தரும் ஆவியின் பிரசன்னமே ஆகும்—யோவா. 6:63; எபே. 6:17.
4. உள்வசிக்கும் கிறிஸ்து ஜீவன் தரும் ஆவியாக, வளர்சிதை ரீதியில் பழைமையைக் கழுவியகற்றி, அதைப் புதியதைக்கொண்டு இடமாற்றி ஓர் உள்ளார்ந்த மறுசாயலாகுதலை உண்டாக்கும்படி எப்போதும் உடனடியான, தற்போதைய, ஜீவிக்கிற வார்த்தையைப் பேசிகிறார்.

B. இத்தகைய கழுவுகிற வழிமுறை மூலம், நாம் கிறிஸ்துவின் பரிசுத்தமான, அழகான, தேவனை வெளிக்காட்டுகிற மணவாட்டியாக, அதாவது, மாசு அல்லது பூரணமின்மை இல்லாத மணவாட்டியாக இருக்கும்படி, கிறிஸ்துவைக் கொண்டு பூரிதமாக்கப்பட்டு, கிறிஸ்துவால் அழகுபடுத்தப்படுகிறோம்—வெளி. 19:7; ஒப். உ.பா. 6:13; 8:13-14.

C. கிறிஸ்து ஜீவன் தரும் ஆவியாக வார்த்தையிலுள்ள தண்ணீரின் கழுவுதலின்படி சபையை சுத்திகரிப்பதன் மூலம் அவளைப் பரிசுத்தமாக்குகிறார்; தெய்வீகக் கருத்தின்படி, இங்கு *தண்ணீர்* என்பது பாய்ந்தோடும் தண்ணீரால் மாதிரியாகக் காட்டப்படும் தேவனுடைய பாய்ந்தோடும் ஜீவனைக் குறிக்கிறது (யாத். 17:6; 1 கொரி. 10:4; யோவா. 7:37-39; வெளி. 7:17; 21:6; 22:1; 17); சபை பரிசுத்தமாகவும் மாசற்றும் இருக்கும்படி நாம் இப்போது இத்தகைய கழுகின்ற வழிமுறையில் இருக்கிறோம்.

D. எபேசியர் 5:26இலுள்ள *கழுவுதல்* என்பதற்கான கிரேக்க வார்த்தை, எழுத்துப்படி *கழுவும்தொட்டி* ஆகும்; பழைய ஏற்பாட்டில் ஆசாரியர்கள் தங்கள் பூமிக்குரிய களங்கத்தைக் கழுவியகற்ற கழுவும்தொட்டியைப் பயன்படுத்தினார்கள் (யாத். 30:18-20); அனுதினமும், காலையும் மாலையும் நாம் வேதாகமத்திடம் வந்து, வார்த்தையிலுள்ள தண்ணீர் என்ற கழுவும்தொட்டியின் மூலம் சுத்திகரிக்கப்பட வேண்டும்.

E. பவுல் வார்த்தையைப் பற்றி, அதன் கழுவும் வழிமுறையோடுகூட பேசும்போது, *ரேமா* என்ற கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்துகிறான் (எபே. 5:26); லோகோஸ் என்பது புறம்சார்ந்த விதத்தில் வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்ட தேவனுடைய வார்த்தையாகும்; ரேமா என்பது ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் நம்மிடம் பேசப்படும் தேவனுடைய வார்த்தையாகும் (மாற். 14:72; லூக். 1:35-38; 5:5; 24:1-8).

F. ரேமா, தனிப்பட்ட ரீதியிலும் நேரடியாகவும் ஏதோவொன்றை நமக்கு வெளிப்படுத்துகிறது; அது, நாம் எதனோடு இடைபட வேண்டும், நாம் எதிலிருந்து சுத்திகரிக்கப்பட வேண்டும் என்பதை நமக்குக் காட்டுகிறது (வெண்கலக் கழுவுந்தொட்டி பிரதிபலிக்கிற, அம்பலமாக்குகிற ஒரு கண்ணாடியாக இருந்தது—யாத். 38:8); நம் ஒவ்வொருவருக்கும் மிக முக்கியமானது இதுவே—இன்று தேவன் தம் வார்த்தையை என்னிடம் பேசுகிறாரா?

G. கர்த்தர் இன்று இன்னும் தனிப்பட்டரீதியிலும் நேரடியாகவும் நம்மிடம் பேசுகிறார் என்பதே நாம் எப்போதும் பொக்கிஷமாகக் கருதுகிற ஒரே காரியம்; ஜீவனில் உண்மையான வளர்ச்சி நாம்

நேரடியாக தேவனிடமிருந்து வார்த்தையைப் பெற்றுக்கொள்வதைச் சார்ந்திருக்கிறது; நம்மில் அவருடைய பேசுதலுக்கு மட்டுமே உண்மையான ஆவிக்குரிய மதிப்பு உண்டு—எபி. 3:7-11, 15; 4:7; சங். 95:7-8.

H. நம் ஜெபங்களின் மையக் குறிப்பு கர்த்தருடைய பேசுதலுக்கான நம் ஏக்கமாக இருக்க வேண்டும்; இந்தப் பேசுதல் அவருடைய இணைபாதியாக ஒரு மணவாட்டியைப் பெற அவருடைய இருதய வாஞ்சையின்படி, அவருடைய நித்தியப் பொருளாட்சியின் இலக்கை நிறைவேற்ற நமக்குத் திறனளிக்கிறது—வெளி. 2:7; ஒப். 1 சாமு. 3:1, 21; ஆமோ. 3:7.

I. மிக நடைமுறைக்குரிய விதத்தில், கர்த்தருடைய பிரசன்னம் அவருடைய பேசுதலோடு ஒன்றாயிருக்கிறது; அவர் பேசும்போதெல்லாம், அவருடைய பிரசன்னத்தை நமக்குள் உணர்கிறோம்; கிறிஸ்துவின் பேசுதல் ஜீவன் தரும் ஆவியின் பிரசன்னமே ஆகும்.

J. நமக்குள் ஜீவன் தரும் ஆவியாகிய உள்வசிக்கும் கிறிஸ்துவின் பேசுதலே, நம் சுபாவத்திலும் குணத்திலுமுள்ள பழைய மூலக்கூறை இடம்மாற்றி, ஒரு புதிய மூலக்கூறை நமக்குள் வைப்பீடுசெய்கிற சுத்திகரிக்கும் தண்ணீர்; இந்த வளர்சிதை ரீதியான சுத்திகரித்தல் ஜீவனில் உண்மையான, உள்ளார்ந்த ஒரு மாற்றத்தை உண்டாக்குகிறது; இது குணரீதியான பரிசுத்தமாகுதல் மற்றும் மறுசாயலாகுதலின் நிஜமாகும்.

K. நாம் ஜீவன் தரும் ஆவியாகிய கிறிஸ்துவால், அதாவது, நம் ஆவியிலுள்ள பேசுகிற ஆவியானவரால் அழகுபடுத்தப்பட்டாக வேண்டும்; நமக்குள் ஜீவன் தரும் ஆவியாகிய கர்த்தருடைய பேசுதல் மூலமாக, நாம் அவருடைய மகிமையான சபையாகிறோம்—எபே. 5:26-27; வெளி. 2:7.

**III. எபேசியர் 5:27, கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை இறுதியில் “கறையோ, சுருக்கமோ, இப்படிப்பட்ட வேறெதுவோ இல்லாமல், பரிசுத்தமாகவும் மாசற்றதுமான” மகிமையான சபையாக, அதாவது, தேவனை வெளிக்காட்டும் சபையாக ஆகிவிடும் என்று வெளிப்படுத்துகிறது**

A. கிறிஸ்து நமக்குள்ளிருந்து வெளிப்பிரகாசிப்பதே நம் ஒரே அழகு; கிறிஸ்து நமக்குள் பாராட்டுவது, தம்முடைய வெளியாக்கத்தையே—சங். 50:2; 2 கொரி. 3:15-18; ஒப். யாத். 28:2:

1. “உன் கண்கள் ராஜாவை மகிமைபொருந்தினவராகக் காணும்” (ஏசா. 33:17); “ராஜா உன் அழகில் பிரியப்படுவார்” (சங். 45:11).
2. “என் பிரியமே! நீ திர்சாவைப் போல் சௌந்தரியமும், எருசலேமைப் போல் வடிவமும், கொடிகள் பறக்கும் படையைப்போல் கெடியுமானவள்”—உ.பா. 6:4.

B. மணவாட்டி ஆயத்தமாக்கப்படுவதென்றால் அவள் “பிரகாசமும் சுத்தமுமான மெல்லிய சணல்நார் ஆடை” அணிந்திருக்கிறாள் என்று அர்த்தம்; இது “பரிசுத்தவான்களின் நீதிகளே” (வெளி. 19:8); இந்த மெல்லிய சணல்நார் ஆடையே மணவாட்டியின் அழகு.

C. தன் திருமண நாளில், மணவாளன் மணவாட்டியின் திறமையைவிட அவளுடைய அழகுக்கே மிக அதிகமாக அக்கறைசெலுத்துகிறான்; நம் தேவனாகிய கர்த்தராகிய இயேசு, பிரதானமாக நம் மனுஷீகத்தின் மூலம் வெளிக்காட்டப்படும் தம் அழகுக்கே அக்கறைசெலுத்துகிறார்; நாம் அவருடைய அருமையான மணவாட்டியாக அவருக்கு வழங்கப்பட ஆயத்தமாக்கப்படுமாறு நாம் தினந்தோறும் கிறிஸ்துவால் அழகுபடுத்தப்பட வேண்டும்.

D. நாம் கர்த்தருடைய வார்த்தையை ஜெப வாசிப்பு செய்வதன் மூலமும், அதை அசைபோடுவதன் மூலமும் (எபே. 6:17-18; சங். 119:15), நாம் அவருடைய வார்த்தையில் அவருடைய அழகை நோக்கிப்பார்க்க நேரம் எடுத்துக்கொள்ளும்போதெல்லாம், அவர் நம் அழகாகிறார்; அவரும் அழகுபடுத்தப்படுமாறு அவருடைய அழகின் வீடாகும்படி நாம் அவரால் அழகுபடுத்தப்படுகிறோம் (27:4; 2 கொரி. 3:18; ஏசா. 60:7; 9, 13, 19, 21).

E. எபேசியர் 5:26இலுள்ள வார்த்தையிலுள்ள தண்ணீரின் கழுவுதல் பிரதானமாக கறைகளோடும் சுருக்கங்களோடும் இடைபடுகிறது; கறைகள் இயற்கை ஜீவனுக்குரிய ஏதோவோன்றைக் குறிக்கின்றன, சுருக்கங்கள் பழைமையோடு தொடர்புடையவை; ஜீவத் தண்ணீர் மட்டுமே ஜீவனின் மறுசாயலாக்குதல் மூலம் வளர்சிதை ரீதியில் இத்தகையக் குறைபாடுகளை கழுவியகற்ற முடியும்.

F. பரிசுத்தமாக இருப்பதென்றால், கிறிஸ்துவைக் கொண்டு பூரிதமாக்கப்படுவதும் கிறிஸ்துவால் மறுசாயலாக்கப்படுவதுமாகும்; மாசற்று இருப்பதென்றால், பழைய மனிதனின் இயற்கை ஜீவனுக்குரிய எதுவும் இல்லாமல், கறையோ சுருக்கமோ இல்லாமல் இருப்பதாகும்—ஒப். உ.பா. 4:7.

G. அதோடு சபையில் "இப்படிப்பட்ட வேறெதுவும்" இருக்காது; அவளிடம் "இவ்விதமான அல்லது அவ்விதமான எந்தக் குறைபாடும்" இருக்காது என்பதே இதன் அர்த்தம்; எந்த விதத்திலும் சபைக்கு எதுவும் கூறப்பட முடியாத இடத்திற்கு தேவன் அவளைக் கொண்டுவருவார்—எபே. 5:27.

**IV. எபேசியர் 5:26-27, உன்னதப்பாட்டு 8:13-14உடன் பொருந்துகிறது; இரண்டு புத்தகங்களும், நம்மிடம் கர்த்தருடைய பேசுதல் மூலமே அவருடைய இரண்டாம் வருகைக்கான வாஞ்சையோடு நாம் அவருடைய மகிமையான மணவாட்டியாக இருக்கும்படி ஆயத்தமாக்கப்படுகிறோம் என்று வெளிப்படுத்துகின்றன—"தோட்டங்களில் வாசம்பண்ணுகிறவளே!/ தோழர் உன் சத்தத்தைக் கேட்கிறார்கள்;/ நானும் அதைக் கேட்கட்டும்./ என் நேசரே! தீவிரியும்,/ கந்தவர்க்கங்களின் மலைகள்மேலுள்ள/ வெளிமானுக்கும் மரைகளின் குட்டிக்கும் சமானமாயிரும்":**

A. உன்னதப்பாட்டில் கிறிஸ்துவை நேசிக்கிற தேடுபவள், தம் தோட்டங்களாகிய விசுவாசிகளில் குடியிருக்கும் அவரிடம், அவளுடைய கூட்டாளிகள் அவருடைய குரலைக் கேட்கையில், தானும் அவருடைய குரலைக் கேட்கப் பண்ணும்படி கேட்கிறாள்—8:13; ஒப். 4:13-16; 5:1; 6:2:

1. இது, கிறிஸ்துவின் காதலிகளாகிய நாம், நம் நேசராகிய அவருக்காகச் செய்யும் வேலையில், எப்போதும் அவருக்குச் செவிசாய்த்து, அவருடனான நம் ஐக்கியத்தைப் பராமரிக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறது—லூக். 10:38-42.

2. நம் வாழ்க்கைகள் கர்த்தருடைய வார்த்தைகளைச் சார்ந்திருக்கின்றன, நம் வேலை அவருடைய கட்டளைகளைச் சார்ந்திருக்கிறது (வெளி. 2:7; 1 சாமு. 3:9-10; ஒப். ஏசா. 50:4-5; யாத். 21:6); கர்த்தருடைய வார்த்தைகள் இல்லாமல் நம் இராஜாவும் (ஏசா. 6:1, 5) நம் கர்த்தரும் (2 கொரி. 5:14-15) நம் தலையானவரும் (கொலோ. 2:19) நம் கணவருமாகிய (2 கொரி. 11:2) கிறிஸ்துவைப் பற்றிய எந்த வெளிப்பாடோ, வெளிச்சமோ, தனிப்பட்ட அறிவோ நமக்கு இருக்காது; விசுவாசிகளின் வாழ்க்கை முழுவதும் கர்த்தருடைய பேசுதலையே சார்ந்திருக்கிறது (எபே. 5:26-27).

B. உன்னதப்பாட்டாகிய இந்தக் கவிதை புத்தகத்தின் முடிவு ஜெபமாக, கிறிஸ்துவின் காதலி, தன் நேசர் முழுப் பூமியையும் நிரப்பப்போகும் (கந்தவர்க்கங்களின் மலைகளாகிய) தம் இனிமையான, அழகான இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும்படி (கலைமானும் மரைக்குட்டியுமாகிய) தம் உயிர்த்தெழுதலின் வல்லமையில் திரும்பிவர துரிதப்படும்படி ஜெபிக்கிறாள்—8:14; வெளி. 11:15; தானி. 2:35:

1. கிறிஸ்துவின் காதலியாக யோவானின் ஜெபம், பரிசுத்த வேதவாக்கியங்களின் முடிவுரையாக, தேவனுடைய தெய்வீக அன்பில் கிறிஸ்துவையும் சபையையும் குறித்த தேவனுடைய நித்தியப் பொருளாட்சியை வெளிப்படுத்துகிற அதே விதத்தில், இத்தகைய ஜெபம் மணவாளனாகிய கிறிஸ்து மற்றும் மணவாட்டியாகிய அவருடைய காதலிகளின் திருமண அன்பில் அவர்கள் இடையேயுள்ள சேர்க்கையையும் கூட்டுறவையும் சித்தரித்துக் காட்டுகிறது—வெளி. 22:20.

2. "கர்த்தராகிய இயேசுவே, வாரும்!" என்பதே வேதாகமத்திலுள்ள கடைசி ஜெபம் (வ. 20); முழு வேதாகமமும் ஒரு ஜெபமாக வெளிக்காட்டப்படும் கர்த்தருடைய வருகைக்கான வாஞ்சையோடு முடிவடைகிறது.